Registered as a Newspaper

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி; 23628

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/-

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 15 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 28 (31-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 30

புலிகள் -- அரச தரப்பு அடுத்த பேச்சுக்கு முன்னோடி

# 2 அம்ச நல்லெண்ண திட்டம் பரிசீலனையில்

## ● படை முகாம்களுக்குப் பதில் பொலீஸ் நிலையங்கள்

## ● வழக்குத் தொடர சாட்சியம் இல்லாதோரை விடுதலை செய்தல்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, டிச. 31

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கக் குழுவுக்கும் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன்னோடியாக, இரண்டு அம்ச நல்லெண்ணத் திட்டம் ஒன்றை அரசாங்கம் மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறிய வந்துள்ளது.

● பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் வழக்குத் தொடர சாட்சியங்கள் போதாது என்று சட்டமா அதிபரால் கருதப்படுபவர்களை விடுதலை செய்வது.

● வடபகுதியில் தொண்டமானாறு, நாவற்குழி ஆயுதப்படை முகாம்களை அகற்றிவிட்டு அந்த இடங்களில் பொலீஸ் நிலையங்களை நிறுவி தமிழ்ப் பொலீஸாரைப் பணியாற்ற வைப்பது.

இந்த இரண்டு அம்சங்களே அந்த நல்லெண்ணத் திட்டத்தில் அடங்கி உள்ளதாகத் தெரிகிறது.

கடந்த திங்கட்கிழமை நடந்த தேசிய பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்திலும் இந்த இரண்டு விஷயங்களும் நீண்ட நேரம் ஆராயப்பட்டன என்று தெரியவருகிறது.

முதலாம் கட்ட நல்லெண்ணப் பேச்சுக்களின்போது சிறையில் உள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழரையும் விடுவிக்கவேண்டுமென்று புலிகள் குழு நிபந்தனை விதித்தது தெரிந்ததே.

சாட்சியங்கள் போதாமையால் வழக்குத் தொடர முடியாமல் உள்ளவர்கள் எத்தனை பேர் சிறைவைக்கப் பட்டுள்ளனர் என்ற விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி அரசாங்கம் சட்டமா அதிபரைப் பணித்துள்ளது.

இதைத் தொடர்ந்து தடுப்பு முகாம்களுக்கு நேரடியாகச் சென்று இது சம்பந்தமான விவரங்களைச் சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

தொண்டமானாறு, நாவற்குழி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி விட்டு அந்த இடங்களில்

(4ம் பக்கம் பார்க்க)

# உயிலங்குளத்தில் கண்ணிவெடி!

## கவசவாகனம் சிதறியது!! 6 சிப்பாய்கள் பலி!!!

மன்னார், டிச 31

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து முருங்கன் நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ அணியின் மீது உயிலங்குளத்தில் வைத்து நேற்றுக் காலை கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் ஆறுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். நவீனரக கவச வாகனம் ஒன்று வெடித்துச் சிதறியது.

இச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

மன்னார் உயிலங்குளம் 11ஆம் கட்டைடியில் சிப்பாய்களின் கவச வாகனங்கள் சென்று கொண்டிருந்த பொழுது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறியவருகிறது.

இச்சம்பவத்தில் பல சிப்பாய்கள்காயமடைந்ததாகவும், காயமடைந்தவர்கள் உடனடியாக அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

## இறந்தவர் பெயரில் ஓய்வூதியம் பெற்றனரா?

யாழ்ப்பாணம், டிசம்பர் 31

இறந்தவர்களின் பெயரில் பலர் தொடர்ந்தும் ஓய்வூதியம் பெற்றுவந்தனரா?

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தபாலதிபர்கள் கோட்டைக்குச் செல்லப் பயந்ததால், ஓய்வூதியம் கொடுப்பனவு காசோலையாக வழங்கப்பட்டது.

சகல ஓய்வூதியக்காரர்களும் கச்சேரிக்கு தொடர்பு கொண்டு தமது காசோலைகளைப் பெற்றனர். ஆனால் 80 பேர் இதுவரை கடந்த 3 மாதங்களாக— தமது ஓய்வூதியம் பெறுவதையிட்டு எதுவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

இதனால் இறந்தவர்கள் பெயரில் மற்றவர்களே ஓய்வூதியம் பெற்றிருக்க வேண்டும் என்று ஓய்வூதியக் கிளை அதிகாரிகள் நம்புகிறார்கள். (உ-5)

## சிதம்பரம் வேண்டுகோளைத் தொடர்ந்து

# ரெலோ உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

## செல்வம், பாபு தொடர்கின்றனர்

சென்னை, டிச. 31

ரெலோ செயலாளர் நாயகம் திரு. ஏ. செல்வமும் இராணுவக் கமாண்டர் பாபுவும் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு இருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

இணை அமைச்சர் ப. சிதம்பரத்தின் வேண்டுகோளை ஏற்று ஏனைய ரெலோ போராளிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

இதனிடையில் இணை அமைச்சர் ப. சிதம்பரம் திரு செல்வத்துக்கு புதுடில்லியில் இருந்து செய்தி ஒன்றை அனுப்பி இருக்கிறார்.

தமிழக அரசுடன் ஒத்துழைக்கும்படியும் முதலமைச்சர் இராமச்சந்திரனின் ஆலோசனைப்படி நடக்கும்படியும் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படியும் திரு. சிதம்பரம், திரு. செல்வத்தைக் கேட்டிருக்கிறார்.

''காவலில் வைக்கப் பட்டுள்ள போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்; கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப் பட வேண்டும்'' — இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை சாகும் வரை உண்ணாவிரதம் தொடரும் என்று திரு. செல்வம் அறிவித்திருக்கிறார். (உ-எ)

## புலிகள் - அரசு பேச்சு: இந்தியா விவரம் சேகரிப்பு

புதுடில்லி,டிச.31

இலங்கை அரச குழுவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் குழுவுக்கும் இடையே காங்கேசன்துறையில் நடந்த இரகசியப் பேச்சுக்களின் விவரங்கள் பற்றிய அறிக்கைகளை தனது சொந்த வழிகளின் மூலம் இந்திய அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இப்படி பிரபல அரசியல்விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

சிதம்பரம் குழுவுக்கு அளித்த உறுதிமொழியில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கிய அதே நேரத்தில், புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தும் புதிய முயற்சியில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஈடுபட்டார்.

இது புலிகள் மத்தியில் பிளவு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசுவட்டாரம் ஈடுபட்டுள்ளதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்படி திரு ரெட்டி எழுதியிருக்கிறார். (உ-ஐ-எ)

முச்சந்தி முனி



சரிசுக் கூடாத வயதுக் காரரை எல்லாம் அரசு சாகடிக்குது தானே அதுக்குப் பதிலாக செத்தவையை '' உயிராக்கி'' பென்ஷனை வாங்கினால் என்ன எண்டு நினைச்சினமோ.. .!

## அரசிடம் விளக்கம் இந்தியா கோருகிறது

புதுடில்லி. டிச. 31

இலங்கை அரசின் பிராந்திய நிலைப்பாடு குறித்து இந்தியா தனது தூதர் டிக்ஸிற் மேலும் விளக்கம் கேட்டுள்ளது.

டிசம்பர் 19ஆம் திகதி சிதம்பரம் குழுவுடன் கடைசியாக நடத்தப் பட்ட பேச்சுக்களின் போது. அம்பாறைத் தொகுதியை விலக்கி விட்டு புதிய கிழக்கு மாகாண சபையை அமைக்க ஜனாதிபதி ஒத்துக் கொண்டார்:

இப்போது அந்த நிலைப்பாட்டில் இருந்து இலங்கை பின் வாங்கியது. இது குறித்தே இவ்விளக்கம் கோரப்பட்டுள்ளது.

விளக்கம் கிடைத்தவுடன் இணைஅமைச்சர்கள் குழு சென்னைக்கு ஜனவரி முதல் வாரத்தில் விஜயம் செய்யும் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன. (உ-ஐ-எ)

## போராளிகள் நால்வர் பதுளையில்கைது!

### சயனைட் அருந்தி ஒருவர் மரணம்

கொழும்பு, டிச 31

பதுளை, மடுல்சிமை என்னும் இடத்தில் தோட்ட லயன் அறை ஒன்றில் தங்கியிருந்த ஈ. பி. ஆர். எல் எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் நான்கு போராளிகளை பொலீஸார் கைது செய்தனர். அச்சமயம் நல்லதம்பி என்பவர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண்.

பெயர்கள் வருமாறு:

அருளானந்தம்,

சிவலிங்கம்

(4–ம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

31–12—1986

புதன் கிழமை

சுபநேரம்:

4·59 முதல்- 6.29 வரை

ராகுகாலம்:

12 29 முதல் - 1·59வரை

இ வ இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## சிப்பாய்கள் முயற்சி வல்வையில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 31

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினரை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்-

நேற்றுப் பகல் ஒரு மணியளவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வல்வெட்டித்துறை முகாமிலிருந்து வெளியேறி மயிலியதனை என்ற இடத்தை நோக்கி வந்தனர்.

இவர்கள் வருகையை எதிர்த்து விடுதலைப் புலிகள் கனன்சாரிஜ் தாக்குதல் மேற்கொண்டனர்.

புலிகளின் தாக்குதலையடுத்து முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்,

இதனால் காயமடைந்த மூன்றுபேர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர், (உ-10)

## யாழ் நகரில் சோகம்

யாழ்ப்பாணம்,டிச 31

பரந்தனில் திங்கட்கிழமை நடைபெற்ற நேரடிமோதலின் போது வீர மரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு நேற்று நகரில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த மோதலின் போது லெப்ரினன்ட் கிறிஸ்ரி (பேச்சிமுத்து- யாழ்ப்பாணம்), ஜக்சன் (ஜெயச்சந்திரன்-வதிரி) ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர்.

இவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக யாழ் பஸ் நிலையத்திலும், வாகனங்களிலும் சோக இசைகள் ஒலிக்க விடப் பட்டன.

கடைகளிலும், வாகனங்களிலும் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டன.

லெப்ரினன்ட் கிறிஸ்தியின் பூதவுடல் சிவப்பிரகாசம் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றினர். (உ-10)

## தமிழ்ப் பெண்கள் மேலும் இருவர் கல்முனையில் கைது

அம்பாறை, டிச. 31

மேலும் இரண்டு இளம் தமிழ்ப் பெண்கள் கல்முனை, மணற்சேனை என்னும் இடத்தில் ஆயுதப் படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

26 வயதான சுப்பையா தவமணி, 18 வயதான தம்பிராசா சாவித்திரி ஆகிய இவர்கள் களுவாஞ்சிக்குடி ஆயுதப் படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி ஏற்கனவே மணற்சேனையைச் சேர்ந்த இரண்டு இளம் தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மகாதேவன் கோமளாதேவி, மகாதேவன் ரஜிகலா ஆகிய இவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

அம்பாறை மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் திரு.ஆ.க. வேல்முருகு இது தொடர்பாக கொழும்பில் உள்ள கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கி இருக்கிறார். (உ-எ-14)

நாளைய உதயனுடன் மூவர்ணக் கலண்டர்

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

★ வங்கி ★ வரி ★ பொலீஸ் ★ தபால் ★ போக்குவரத்து

# யாழ். குடாநாட்டின் சிவில் நிர்வாகம் இவ்வாரம் முதல் புலிகளின் கைக்கு

யாழ்ப்பாணம், டிச 31

யாழ் குடா நாட்டின் சிவில் நிர்வாகம் இவ்வாரம் முதல் விடுதலைப் புலிகளின் கைக்கு மாறுகிறது.

வங்கி, வரி, பொலீஸ், தபால், போக்குவரத்து உட்பட பல சிவில்சேவைகள் புலிகளினால் நிர்வகிக்கப்படவிருக்கிறது.

இந்நிர்வாகம் குடாநாட்டிற்கு வெளியே தமிழ்ப் பகுதி எங்கும் விரைவில் விஸ்தரிக்கப்படும் என புலிகள் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

### போக்குவரத்து

ஜனவரி முதல் வாரத்தில் இருந்து தமிழ்ப் பகுதி எங்கும் போக்குவரத்துப் பொலிஸ் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

யாழ் நகரின் முக்கிய சந்திகளில் சீருடைதரித்த பொலீசார்வீதிப்போக்குவரத்துகளைக் கவனிப்பர்.

இவர்களுக்கென புதிய பொலீஸ்நிலையம் ஒன்றும் யாழ் நகரப் பகுதியில் திறக்கப்படவிருக்கிறது.

வாகன அனுமதிப் பத்திரங்களையும் வாகன நடைமுறைகளையும்இவர்கள் கவனிப்பர்.

வாகன வரிகளும் அந்தந்த இடத்தில் வைத்து பொலீசாரினால் அறவிடப்படும்.

குற்றம் இழைப்போருக்கு அந்தந்தஇடங்களிலேயே தண்டம் அறவிடப்படும் எனவும் புலிகள் தரப்பின் பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

### நடை பாதை வியாபாரம்

தற்பொழுது வீதிப் போக்குவரத்து சீர்கெட்டிருப்பது நடை பாதை வியாபாரிகளினாலும்மினி பஸ்காரர்களினாலுமே என்று தெரிவிக்கப்படுகிறது

நடைபாதை வியாபாரிகளுக்கென முதலில் இடம் ஒதுக்கப்பட்டு அவர்கள் அங்கு இடமாற்றப்படுவர்.

இதேபோல மினிவான்களும் வேறு ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டு குறிப்பிட்ட நேரம் வந்ததும் பஸ் நிலையத்துக்குச் செல்ல அனுமதிக்கப் படும்.

தமிழீழ போக்குவரத்துச் சபையும் விஸ்தரிக்கப்படும்

அதற்கான சின்னமும் வெளியிடப்பட்டுள்ளது.

''உள்ளங்கைக்குள் புலியின் தலைஇருப்பதுபோல்'' அந்த சின்னம் அமைக்கப் பட்டுள்ளது.

### தபால் தலை

இதேவேளை விடுதலைப் புலிகளின் தபால் தலைகளும் இம்மாதம் அளவில் வெளியிடப்படும்.

### பாடசாலைகள்

பாடவிதான சட்டத்தின் கீழ் பாலர் பாடசாலைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்.

பாலர் பாடசாலைகள் அனைத்தும் புலிகளின் நேர்முகக் கண்காணிப்பின் கீழ்க்கொண்டுவரப் படும்.

தனியார் கல்லூரிகளும் கண்காணிக்கப் படும்.

### வங்கி

வங்கி நிர்வாகமும் புலிகளினால் ஆரம்பிக்கப் படும்.

குறைந்த வருமானத்துடன் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் இந்த வங்கி மூலம் குறைந்த வட்டியில்கடன் வழங்கப்படும்.

வங்கி எதுவித இலாபத்தினையும் நோக்கமாக கொண்டு இயங்கமாட்டாது.

'' படிப்படியாக எமது திட்டங்கள் தமிழ்ப்பகுதியில் அடுத்த ஆண்டு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், டிச. 31

மன்னாரில் நேற்று ஊர்காவல் படையினரின் ஏற்பாட்டில் ஹர்த்தால் மேற்கொள்ளப் பட்டது.

மன்னாரில் உள்ள முஸ்லிம் இயக்கம் ஒன்றினைச் சேர்ந்த நபர் ஒருவரை இளைஞர் கோஷ்டி ஒன்று கடத்திச் சென்றதற்காகவே இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டதாம்.

மன்னாரில் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் குண்டுச் சத்தங்களும் கேட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

முரசுமோட்டை பழைய கமத்திலுள்ள இருபோகம் செய்கை பண்ணக்கூடிய, நீர்ப்பாசன வசதியுள்ள 8 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: K. சிவஞானம், புத்தூர் மேற்கு, புத்தூர்.

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்'

இடைநிலை - உயர்நிலைப் பாடசாலைகளுக்கு

# 6ஆம் ஆண்டு வகுப்புகள் மாற்றப்படுகின்றன

## ஜனவரி 31 இல் தெரிவுப் பரீட்சை

பலாலி, டிச 31

புதிய கல்வி அமைப்பில் ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து இடைநிலை - உயர் நிலைப் பாடசாலைகளிற்கு 6-ஆம் ஆண்டு வகுப்புகள் மாற்றப்படுகின்றன.

இதனால் ஆரம்பப்பாடசாலைகளில் இதுவரையிருந்த 6ஆம் ஆண்டுப் பிள்ளைகளை யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கு யாழ் கல்வித் திணைக்களம் தெரிவுப்பரீட்சையொன்றை நடத்தவுள்ளது.

1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி இப்பரீட்சையினை நடத்த கல்வித் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது

தற்போது குறிப்பிட்ட வகுப்புகளற்றபாடசாலைகளில் 6ஆம் ஆண்டில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர் தமக்கு அயலில் உள்ள — அல்லது தாம் விரும்பும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கும்படி கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளற்ற ஏனைய பாடசாலைகள் தமக்கு அயலில் உள்ள 6-ஆம் ஆண்டு வகுப்புகளற்ற பாடசாலைகளில் இருந்து வரும் பிள்ளைகளை எவ்வித தடையும் இன்றி அனுமதிக்க வேண்டும் எனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்படாத சில பாடசாலைகளும் தமது பாடசாலைகளுக்கு தாமாகவே பரீட்சைகளை வைத்து சில மாணவர்களைச் சேர்த்தும், சில மாணவர்களைச் சேர்க்காமலும் விடுகின்ற நிலையினைச் சுட்டிக்காட்டியபோதே 'எவ்வகையிலும்' பாடசாலைகளுக்கு அனுமதியற்றநிலை மாணவர்களின் கல்விக்குத் தடையாக இருக்காது அயலில் உள்ள பெரிய பாடசாலைகள் அனுமதியினை வழங்க வேண்டுமெனத் தெரிவித்தார். (இ-119)

முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை:

# மஜீத்தை பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார் மந்திரி ஜெயசூரியா

அம்பாறை, டிச. 31

காணி வழங்கப்படுவதில் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சம் பற்றிப் பேச பிரதி அமைச்சரும் சம்பாந்துறை எம்பியுமான ஜனாப் அப்துல் மஜீதை, விவசாய ஆராய்ச்சி அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா அழைத்திருக்கிறார்.

இச் சந்திப்பு ஜனவரி 5ஆம் திகதி அமைச்சு அலுவலகத்தில் இடம் பெறும்.

ஹிங்குரன சீனித் தொழிற்சாலையில் தொழில் வழங்குவது; காணி வழங்குவது ஆகியவற்றில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப் படுவது, இது சம்பந்தமாக தனது கடிதங்கள் மதிக்கப்படாமை ஆகியன குறித்து சம்பாந்துறை எம் பி. ஜனாப் மஜீது நாடாளுமன்றத்தில் கண்டனக் குரல் எழுப்பியது தெரிந்ததே.

அநீதிகள் தொடருமானால் பதவி துறக்கவும் தயங்கமாட்டேன் என்றும் ஜனாப் மஜீது அப்போது எச்சரிக்கையும் விட்டு இருந்தார்,

இதைத் தொடர்ந்து தான் அமைச்சர் இச் சந்திப்பை ஒழுங்கு செய்து இருக்கிறார். (இ-எ-14)

விக்ஞ டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட்
யாழ்ப்பாணம்

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்

DAY CLASSES

ஆரம்பம்: ஜனவரி 5

காலை 8-00 மணி

# மரவேலைப் பாடசாலைகளுக்கு மாணவர் சேர்ப்பு

## 6மாத உயர் பயிற்சி வெலோனாவில்

யாழ்ப்பாணம், டிச. 31

யாழ்ப்பாணத்திலுள்ள மரவேலை பாடசாலைகளுக்கு அடுத்த ஆண்டுக் கல்விக்காக மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பங்களை யாழ் சிறுகைத்தொழில் திணைக்களம் கோரியுள்ளது, ஒவ்வொரு பாடசாலைக்கும் 20 மாணவர்கள் வரை சேர்க்கப்படுவார்கள்.

யாழ்ப்பாணம் மடத்தடி வீதி, மானிப்பாய் நவாலி வீதி, சுன்னாகம் மின் நிலைய வீதி, ஆகியவற்றில் உள்ள மரவேலைப் பாடசாலைகளுக்கே மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என சிறு கைத்தொழில் யாழ் பிரதேச உதவிப் பணிப்பாளர் திரு. சி. ஆர். வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

இவர்களுக்கு மரவேலை இயந்திரங்களாலும், கையினாலும் செய்யப் பழக்கப்படும்.

ஒருவருட மரவேலை டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இவர்களில் 6 மாத உயர் பயிற்சியை மொறட்டுவை 'வெலோனா'வில் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படும்

மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 5 ரூபா வீதம் உதவிப்பணம் வழங்கப்படும். மேலும் அவர்கள் செய்யும் மரவேலைப் பொருள்களின் கூலியின் 80 சதவீதம் அவர்களுக்கு வழங்கப்படும்.

நாளாந்த உதவிப் பணத்தை 5 ரூபாவிலிருந்து 15 ரூபாவாக கூட்டிக் கொடுக்க திணைக்களம் ஆலோசித்து வருகிறது. என்றும் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-5)

ராமகிருஷ்ணாலயத்தில்

# இந்து - கிறிஸ்தவ மதத்தினர் இணைந்து கொண்டாடிய நத்தார் விழா

யாழ்ப்பாணம். டிச 31

திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தில் இந்து மதத்தினரும் கிறிஸ்தவ மதத்தினரும் ஒன்று கூடி நத்தார் விழாவைக் கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை யாழ் சிவா குடும்பத்தின் ஆதரவில் நடைபெற்றன.

திரு. இரா. மகேந்திர சிங்கம் யாழ் சிவா குடும்பத்தின் சார்பில் கிறிஸ்தவர்களை வரவேற்று உரையாற்றினார்.

அவர் தமது உரையில் சிவா குடும்பம் என்பது சுவாமி சாந்தானந்தா காட்டிய ஆத்மீகப் பாதையில் செல்லும் உலகம் பூராவும் வியாபித்துள்ள கூட்டத்தினரால் உருவாக்கப்பட்டது என்றார்.

பல்வேறு மதங்களும் கடவுளை அடையும் பல்வேறு பாதைகளே என்பதைத் தெட்டத் தெளிவாக வாழ்ந்து காட்டிய ராமகிருஷ்ணரின் ஆலயத்தில் இந்து மதத்தினரும் கிறிஸ்து மதத்தினரும் சேர்ந்து நத்தார் தினத்தை விழாவாகக் கொண்டாடக் கூடியிருப்பது மிகவும் பொருத்தமானதோடு மட்டுமல்லாது மேலும் சமய சமரசத்துக்கு நடைமுறையில் வழிகோலும் என்றும் அவர் கூறினார்.

சுவாமி சாந்தானந்தாவினால் இயற்றப்பட்ட நத்தார்ப் பாடல்களை யாழ் சிவா குடும்பத்தினர் பாடினார்கள் யாழ் சென் பீற்றர் தேவாலயப் பாடகர்களினால் நத்தார்க் கீர்த்தனைகள் பாடப்பட்டன.

வணக்கத்துக்குரிய ஜெபனேசன் தனது நத்தார் செய்தியில் மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறைகளைக் கற்பிக்கவே இயேசுமனித உருவில் அவதரித்தார் என்றார். (இ)

# அண்ணாமலை இசைத்தமிழ் மன்றக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிச.31

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் பொதுக் கூட்டம் ஜனவரி நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.மணிக்கு யாழ்/ஸ்தான சி சி த. க. பாடசாலை (கல்வித் திணைக்களத் திலிருக்கும்) மண்டபத்தில் நடைபெறும்.

சங்கச் செயலாளர் சங்கீத பூஷணம் திரு. எஸ். பாலசிங்கம் இதனை அறிவித்துள்ளார். (ஒ)

மக்கள் முகம்

## ஓய்வு பெற்றார்

காரைநகர் வலந்தலை வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலையில் 1963ஆம் ஆண்டு முதல் 23 வருடகாலம் 3 ஆசிரியையாக பணியாற்றி திருமதி.சி கதிரவேலு அண்மையில் ஓய்வுபெற்றார்.

அனுராதபுரம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஆசிரியராக பதவியேற்ற இவர் கொள்ளுப்பிட்டி அர்ச் அந்தோனியார் பாடசாலையிலும் கடமையாற்றினார்.

இவர் சிறிது காலம் பாடசாலை அபிவிருத்திச் சபை பொருளாளராகவும் கடமை புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (இ)

## புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்.டிச.31

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டவென மேலதிகமாக 4லட்சம் ரூபாவை யாழ் அரச அதிபர் அபிவிருத்திச் சபை நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

சென்ற வருட ஒதுக்கீட்டிலிருந்து 2லட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது

இந்த நிதி ஒதுக்கீட்டில் கீல் மாடி கட்டப்படும்.

புதிய மேலதிக ஒதுக்கீட்டில் மேல் மாடி கட்டப் படும்.(இ-5)

## பிரசைகள் குழு

அம்பாறை, டிச 31

அம்பாறை மாவட்டத்துக்கு என்று தனியான பிரசைகள் குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கூட்டணிப் பிரமுகர் திரு. ஆ. க வேல்முருகு இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்

மாவட்டப் பிரசைகள் குழு அமைக்கப்பட்டவுடன் அக்கரைப்பற்று பிரசைகள் குழு கலைக்கப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ-14)

## மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்குக் கட்டிடம்

யாழ்ப்பாண நகரை அண்மித்துள்ள இடமொன்றில் பண்ணையில் நடைபெற்று வந்த மார்புநோய் சிகிச்சை நிலையத்தை (Chest Clinic) நிறுவ வேண்டியிருப்பதனால் அதற்கு 2000 - 2500 சதுர அடி வரை இட வசதியுள்ள வீடு ஒன்று அவசியமாகின்றது. இதற்கு நியாயமான வாடகை கொடுக்கப்படும். விரும்புவோர் உடனடியாக எனது விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்

வை. மு. பஞ்சலிங்கம்,
யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

விக்ஞ டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்

O/L, 9, 8, 7, 6

ஆரம்பம்: ஜனவரி 5

மாலை 2.30

GLORIA TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

* நோர்வே செல்லும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவசமாக பொண்ட் செய்து கொடுக்கப்படும்.

மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND)
விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
இன்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

உங்கள் உருளைக்கிழங்கு தக்காளி பயிர்களைத் தாக்கும் முன்பின் கூற்று வெளிறல் (ஏர்லி லேட் பிளைட்) நோயை வெகு சுலபமாகக் கட்டுப்படுத்த புதிய விஞ்ஞான கண்டு பிடிப்பு

கோசைட் 101

குயிப்ரிக் ஹைட்றொக்சைட் உலோக செம்பு 50% பூஞ்சண கொல்லி

Griffin

திராட்சை, புகையிலை. மிளகாய் வெங்காயம், பூசணிவகை கரட், கோவா, போஞ்சி, சலாது. கோப்பி, தேயிலை, வெற்றிலை அலங்காரத்தாவரம் மற்றும் பயிர்களில் ஏற்படும் பூஞ்சண நோய்களை கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப் பட்டுள்ளது.

இது அமெரிக்க கிரிப்பின் இன்டர்நெஷனலின் தயாரிப்பு

விலை ரூ. 25/50 அதற்கு மேலும்

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட்வங்கிக் கட்டிடம் கொழும்பு 1.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

செய்ய வேண்டிய கருமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. செய்யக் கூடாதவை தான் செய்யப்படுகின்றன. ஒழுங்கற்ற ஆசைகள் அதிகரிக்கின்றன. சிந்தனையற்ற மக்கள் எண்ணிக்கை பெருகுகின்றது.
— புத்தபிரான்

உதயன்

இல.15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 31-12-1986 த.பெ இல 23

## மறையும் ஆண்டும் மனிதனும்

நத்தார் தொடக்கம் புதுவருடப் பிறப்பு வரையான காலத்தை மேலை நாடுகளில் 'பருவம்' என்று சொல்வார்கள் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் ஆகியோரை வாழ்த்தும் போது 'பருவகால வாழ்த்துக்கள்' என்றே கூறுவார்கள் குறிப்பிட்ட வாரம் முழுவதும் குதூகலமும் கொண்டாட்டமும் நிறைந்திருக்கும்.

உலக இருள் போக்கிய யேசுபிரான் அவதரித்த நாளோடு, தமது வாழ்க்கையிலும் புதிய நம்பிக்கையை ஊன்றச் செய்து, ஒளிமயமான வாழ்க்கை அமைய எதிர்பார்ப்பதே அந்தக் குதூகலத்துக்கும், கொண்டாட்டத்துக்கும் பின்னணியாகும். ஆனால் எமது பகுதிகளில் இந்தக் காலத்தில் ஒளிவிழாக்கள் நடைபெறுகின்றன. ஒளி விழாக்கள் எல்லாச் சமயத்தவர்களாலும் கொண்டாடப்படுவது உண்டு

கிறிஸ்தவர்கள் நத்தார் காலத்தில் ஒளி விழாக் கொண்டாடுகிறார்கள். இந்துக்கள் தீபாவளி அன்றும், கார்த்திகைத் தீபம் அன்றும் ஒளிவிழாக் கொண்டாடுகிறார்கள் பௌத்தர்களும் 'பஹன' என்ற போயா நாட்களில் ஒளிவிழாக் கொண்டாடுகிறார்கள்.

ஒளி விழாக்களின் அடிப்படைத் தத்துவம் ஒன்றேயாகும். மனித வாழ்வின் பல துறைகளையும் கவ்வி இருக்கும் இருள் அகன்று ஒளி பிறக்க வேண்டும் அதற்கான ஆன்மீக உணர்வும், உள்ளத்து உணர்வும் மக்களிடம் பிறக்க வேண்டும் என்பதே அந்தப் பொது நோக்கமாகும்.

காலம் உருண்டு ஓடுவது. ஆண்டுகளும் கடந்து போகின்றன இன்றோடு 1986 ஆம் ஆண்டு உதிர்ந்து போகிறது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் காலத்தின் நியதி. அந்த வகையில் இன்றோடு பழையன கழிகின்றன.

1986 ஆம் ஆண்டு உள்நாட்டைப் பொறுத்த மட்டிலும், உலகத்தைப் பொறுத்த மட்டிலும் உவந்து சொல்லக் கூடிய ஆண்டாக இருக்கவில்லை.

உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் சண்டை, குழப்பம், வன்செயல், பூசல், போட்டி என்பனவே மேலோங்கி நின்றன.

மக்கள் எல்லோரும் ஒரே இனம், என்பதை மனிதன் உணரத் தவறுவதும், மற்றவனது விருப்பு, வெறுப்புகளைப் புரிந்து கொள்ளத் தவறுவதுமே இவற்றுக்குக் காரணம்.

மதங்கள் பல இருந்தபோதிலும் மனிதனின் மனம் இன்னமும் பரிசுத்தமாகவில்லை கள்ளம், கபடம், பொறாமை போன்ற அழுக்குகள் அவனது இதயத்தை நிறைத்துள்ளன. ஆணவம், அதிகார ஆசை ஆகியன ஊத்தையாக நிரம்பி வழிகின்றன.

மனிதனின் மனம் சுத்தமாகி விட்டால் உலகில் சண்டை ஏற்படவும், பிணக்குகள், உருவாகவும் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகவும் சாத்தியமில்லை.

ஆகையால் 1986-இல் நடந்த மனித பாதகங்களுக்கு அந்த ஆண்டை நொந்து கொள்வதில் அர்த்தமில்லை. மனிதன் தன்னைத் தானே நொந்து, திருந்திக் கொள்வானாக

## பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு சிதம்பரம்குழுவைச் சந்திக்கும்

யாழ்ப்பாணம் டிச.30

சிதம்பரம் குழு அடுத்த முறை கொழும்பு வரும் பட்சத்தில் பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுப்பிரதி நிதிகள் அக்குழுவைச் சந்திப்பார்

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

திரு. எஸ்.பி. அருமைநாயகம் தலைமையில் குழுக்கூட்டம் நடைபெற்றது.

சந்திப்பின்போது சரித்திர பூர்வமான தமிழரின் தனித்தாயகம் பற்றி சிதம்பரம் குழுவிடம் எடுத்துக்கூறப்படும் என்றுஒன்றிணைப்புக்குழுவின் அமைப்பாளர் நாயகம்திரு.ச. சிவானந்தராசாதெரிவித்தார்.

(இ-5)

## வீடமைப்பு ஆண்டு

யாழ்ப்பாணம்.டிச 31

1987ஆம் ஆண்டை சர்வதேச வீடமைப்பு ஆண்டாக ஸ்ரீலங்கா அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து ஜனவரி முதலாம் திகதி சகல ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் நடத்தப்படும். (இ-10)

## வரியிறுப்பாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 31

உரும்பராய் - ஊரெழு வரியிறுப்பாளர் சங்க விசேட பொதுக் கூட்டம் ஜனவரி 3 ஆம் திகதி நடை பெறவுள்ளது

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலத்தில் நடை பெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய உத்தியோகஸ்தர் தெரிவும், மின்சாரத் தடை, வீதிகள் திருத்தப்படாமை, வரி அதிகரிப்பு ஆகிய விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

(இ-5)

### 1986ஐத் திரும்பிப் பார்க்கையில்...

# ஆரம்பத்தில் அக்கிரம ராணுவ நடவடிக்கைகள்

# இறுதியில் திருப்பங்களும் சமரசப் போக்கும்

### உள்நாட்டில்

### ஜனவரி

* யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு யாழ் நகரில் நின்ற போது, இராணுவம் தாக்கியதில் நகரில் ஒரு முஸ்லிம் உட்பட 12 பேர் பலி.
* கொழும்பில் தரித்து நின்ற யாழ்தேவி ரயில் பெட்டியிலிருந்து வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டது.
* இலங்கைத் தேயிலையில் நஞ்சு-தமிழீழ இராணுவம் எச்சரிக்கை.
* யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து பேராசிரியர் சிவத்தம்பி' சிவபாலன் ஆகியோர் ராஜினமா.
* யுத்த நிறுத்தத்திலிருந்து ஈழ தேசிய விடுதலை முன்னணி விலகியது.
* ஆலங்கேணியில் 20தமிழர் கடற் படையினர் சுட்டுப் பலி.
* பாதுகாப்பு வலயத்தை எதிர்த்து பொது மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம். மறியல் போராட்டங்கள்
* கிளிநொச்சி ரயில் நிலையத்தில் பயணிகள் 11 பேரை இராணுவம் சுட்டுக் கொன்றது.
* மலையகத் தமிழரின் குடியுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

### பெப்ரவரி

* கிளிநொச்சியில் சந்தைக்கு சென்ற 30 பேர் மர்ம மறைவு.
* தர்மபுரத்தில் 60 தமிழர், படையினர் நடவடிக்கைகளில் பலி.
* பட்டிருப்பு முன்னாள் எம்.பி. திரு. பி. கணேசலிங்கம் காலமானார்.
* வவுனியாவில் காரோடு 3 தமிழர் எரிப்பு
* பருத்தித்துறை முதல் கோமாரி வரை 165 மைல் கடல் பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம்.
* இராணுவம் சுட்டு ஓய்வூதியம் பெறச் சென்றவர்கள் 3 பேர் கோட்டையருகில் பலி.
* தாவடியில் யுத்த விமானங்கள் குண்டு வீச்சு, 2 சிறுவர், வயோதிபர் ஒருவர் பலி
* தெஹிவத்தையில் கண்ணிவெடி 35 சிங்களவர் மரணம்.
* தங்கவேலாயுதபுரத்தில் 60 தமிழர் இராணுவத்தால்கொலை.
* தாவடி, சுதுமலை, சுருவில், மாதகல் பகுதிகளில் ஒரே நேரத்தில் விமானத்தாக்குதல்கள்—மூவர்பலி.
* தமிழீழத்தையும் மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படுவதையும் எதிர்த்து பிக்குமார் கொழும்பில் சத்தியாக்கிரகம்.

### மார்ச்

* நயினாதீவில் இலங்கைக் கடற்படைக் கப்பல் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது.
* படையினரால் நயினாதீவு ஆலயம் சேதமாக்கப்பட்டு தேர்கள் மஞ்சம் எரிக்கப்பட்டன
* கன்னியாவில் 6 தமிழர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.
* பண்டிதமணி காலமானார்.
* நெடுங்கேணியில் 25 தமிழர் சுட்டும் எரித்தும் கொலை
* ஓமந்தையில்குண்டு வெடித்து யாழ்தேவியில் தீ.

### ஏப்ரல்

* கொக்காவில் கண்ணிவெடியில் 10 சிப்பாய்கள் பலி.
* இராணுவத் தாக்குதலால் செல்வச் சந்நிதி மணி விழுந்து-கோபுரம் இடிந்தது. தேர் தீக்கிரை, அர்ச்சகர் பலி
* சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் கைது.
* யாழ் நகரில் இராணுவம் தாக்கி ஐவர் பலி
* கந்தளாய் நீர்த்தேக்கம் உடைப்பெடுத்தது 20ஆயிரம் பேர் அகதிகளாயினர். 56 பேர் பலி.
* அனுராதபுரம் எண்ணெய்க்குதத்தில் பவுஸரில் குண்டு வெடித்தது.
* வெள்ளவத்தை பொலீஸில் பார்சல் குண்டு வெடித்தது
* அன்னை திரேசா இலங்கை விஜயம்.
* மண்டூர் முருகன் அம்மன் கோயிலுக்குள் சிப்பாய்கள் அட்டகாசம்.
* சிதம்பரம் குழு கொழும்பு வந்தது.
* ரெலோ — புலிகள் மோதல்.

### மே

* கட்டுநாயக்காவில் குண்டு வெடித்து விமானம் சிதறியது 26 பேர் பலி.
* 'ரெலோ' தலைவர் ஸ்ரீசபாரத்தினம் கொலை.
* கொழும்பில் மத்திய கந்தோரில் குண்டு வெடிப்பு.
* பலாலி ஆசிரியர் கலாசாலை மினி இராணுவ முகாமானது
* வயாவிளான் மகாவித்தியாலயத்திலும் மினி முகாம்.
* மண்டைதீவில் மினி முகாம்
* செம்பியன்பற்றில் பொம்பர் தாக்குதல். 8 பேர் பலி
* துர்க்கை அம்மன் ஆலய நகைகள் மீளக் கிடைத்தன.
* மகாவிளாங் குளத்தில் 19 சிங்களவர் சுட்டுக் கொலை.
* யாழ்பிரதம தபால் நிலையம் இடமாற்றம்
* கொழும்பில் குண்டு வெடிப்பு 9 பேர் பலி.
* மூதூரில் கண்ணி வெடிகள். சிப்பாய் 20 பலி.
* உதயதேவி ரயிலில் குண்டு வெடிப்பு. 8 பேர் பலி

### ஜூன்

* பென்சன் பெறச் சென்ற இருவருக்கு கோட்டையிலிருந்து சூடு.
* திருமலை செல்வநாயக புரத்தில் 10 தமிழர் சடலங்கள் மலகுழியிலிருந்து மீட்பு.
* கிளிநொச்சியில் இராணுவம்-போராளிகள் தொடர்ந்து போராட்டம். பெருந் தொகையானோர் பலி
* யாழ் அரச அதிபரின் சாரதி குண்டு வீச்சுக்குப் பலி. அரச அதிபர் மயிரிழையில் தப்பினர்.
* சிறையில் தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம்.
* அடகு நகை மீட்க வந்தவர்கள்மீது பலாலி முகாம் சிப்பாய்கள் தாக்குதல். 2 பேர் பலி.
* ஷெல் தாக்குதலில் கிளிநொச்சியில் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் 5 பேர் பலி.
* மண்டைதீவுக் கடலில் 34 தமிழர் சுட்டு, வெட்டிக் கொலை
* திருமலையில் 12 மணி நேர ஊரடங்கு.
* மூதூரில் 19 தமிழ் அகதிகள் சிப்பாய்கள் சுட்டு மரணம்.
* தோலகட்டி ஆச்சிரம கிறிஸ்தவ துறவி சுட்டுக்கொலை
* நிலக்கண்ணி வெடியில் கிழக்கில் 30 சிப்பாய்கள் பலி
* மாகாண சபை யோசனையை விடுதலை அமைப்புகள் நிராகரித்தன
* பரந்தனில் எண்மர் மரத்துடன் கட்டப்பட்டு சுடப்பட்டனர்.

### ஜூலை

* மன்னாரில் பீரங்கித் தாக்குதல் 7 மீனவர் பலி.
* கோப்பாய் - கைதடிப் பாலத்தில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சிப்பாய்களினால் சுட்டுக் கொலை.
* இந்திய மீனவர் 9 பேர் கடலில் சுட்டுக் கொலை.
* ஈ பி ஆர்.எல் எவ் படகு கவிழ்ந்து ஏழு பேர் பலி.
* திருகோணமலையில் லொறிகள் மீது துப்பாக்கிச் சூடு 16 சிங்களவர் பலி.
* படுவான் கரையில் 17 தமிழர் உயிரிழப்பு.
* திருமலையில் 11 தமிழர்களை ஊர்காவல் படை சுட்டுக் கொன்றது.
* மாகாண சபையை எதிர்த்து ஐந்து அமைப்புகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.
* மூதூரில் 67 தமிழர்கள் சிநடையினரால் சுட்டு கொலை
* நெடுங்கேணியில் பஸ்மீது ஹெலிக்கொப்டர் தாக்குதல் 15 பயணிகள் பலி.
* இந்திய உயர் அதிகாரி பூரி யாழ் விஜயம் இந்திய மீனவர் கணபதி பூரியுடன் அனுப்பப்பட்டார்.
* நெடுங்கேணியில் சிங்கள பஸ் பயணிகள் 25 பேர் பலி
* யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் கலவரம்
* வவுனியாவில் 31 பேர் பலி குண்டு வெடித்து பஸ் சிதறியது
* செங்கலடியில்தேவநாயகம் நடத்திய கூட்டத்தை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கிச் சூடு.

### ஆகஸ்ட்

* திருமலையில் துறைமுக உடைமைகள் குண்டு வைத்து நாசம்
* இந்தியாவில் பயங்கர ரயில் விபத்து 150 பேர் பலி.
* வெலிக்கடையில் தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம்.
* பி.பி.சி. செய்தியாளர் 'ஹம்பிரி ஹக்ஸிலி'யைஉடன்நாட்டை விட்டு வெளியேறுமாறு இலங்கை அரசு உத்தரவு.
* யாழ் கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல் மூவர் பலி.
* மட்டக்களப்பு வாகரையில் நிலக்கண்ணி ஆறு சிப்பாய்கள் பலி.
* அத்திலாந்திக் கடலில் 147 இலங்கையர் கைவிடப்பட்டனர்.
* திருமலையில் புலிகள் — படை மோதல் 6 சிப்பாய்கள் பலி.
* அரசு - கூட்டணிப் பேச்சு கொழும்பில்.
* முஸ்லிம் – தமிழர் கலவரங்களுக்கு வித்திட்ட மூன்று தமிழ் இளைஞருக்கு கல்முனையில் மரணதண்டனை.
* யாழ் கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல் இருவர் பலி
* யாழ் நகரில் இராணுவ ஷெல் தாக்குதலில் மாப்பிள்ளை மணவாளக் கோலத்துடன் பலி.
* யாழ் நகரில் ஷெல் தாக்குதலில் ஹட்டன் நாஷனல் வங்கி முகாமையாளர் எஸ். சூரியகுமார் மரணமானார்.
* கிளிநொச்சியில் படைகள் – போராளிகள் உக்கிர தாக்குதல் 2 தமிழர் பலி.
* கோட்டை முகாமை அகற்றக் கோரி யாழ் நகரில் ஊர்வலம்.
* கன்னியாவில் நிலக்கண்ணி லெப்ரினன்ட் உட்பட 6 சிப்பாய்கள் பலி.
* வயாவிளானில் மகாவித்தியாலயத்தில் நிலைகொள்ள வந்த இராணுவத்துடன் புலிகள் மோதல்.

### செப்டம்பர்

* மன்னாரில் படையினருடன் புலிகள் நேரடி மோதல்.
* மட்டக்களப்பில் விமானங்கள்மீது போரா

(4-ஆம் பக்கம் பார்க்க)

# உலகை உலுப்பிய வன்செயல்கள்; சமாதானம் இன்றி உதிரும் ஆண்டு

### ஜனவரி

* தென் யேமன் கிளர்ச்சியால் ஜனாதிபதி முகம்மது நாட்டை விட்டுத் தப்பியோடினார்.
* இந்திரா காந்தியைக் கொலை செய்த மூவருக்கு டில்லியில் விசேட நீதிமன்றம் மரண தண்டனை.
* உகண்டாவில் ஜெனரல் ஒகெல்லா தலைமையிலான ராணுவ ஆட்சி கலைக்கப்பட்டதாக எதிர்ப்பு ராணுவம் அறிவிப்பு.
* விண் வெளிக்குப் புறப்பட்ட சலஞ்சர் விண்கலம் வெடித்துச் சிதறியதில் 2 பெண்கள் உட்பட 7 பேர் பலியானார்கள்.
* பாகிஸ்தான் எதிர்க் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தான் திரும்பினார்.

### பெப்ரவரி

* பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இந்தியா விஜயம்.
* பிரபல தத்துவ மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி கலிபோர்ணியாவில் காலமானார்.
* பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியாக திருமதி கொராஸின் அக்கினோ பதவி ஏற்றார்.
* முன்னாள் பிலிப்பின்ஸ் ஜனாதிபதி மார்கோஸ் நாட்டை விட்டு விமானத்தில் தப்பி ஓட்டம்.

### மார்ச்

* சுவீடன் பிரதமர் ஒலாக்பாமே படுகொலை.
* காலிஸ்தான் பிரகடனம் பஞ்சாப் தீவிரவாதிகளால் செய்யப்பட்டது.
* நேபாளத்தில் தேர்தல்கள் நடத்தின.

### ஏப்ரல்

* லிபியா மீது அமெரிக்கா திடீர்த் தாக்குதல். கடாபி மாளிகையும் சேதம்.
* அன்னை திரேஸா இலங்கை விஜயம்.

### மே

* அமெரிக்காவும் இஸ்ரவேலும் நட்சத்திரப் போர்த் திட்டத்தில் ஒத்துழைக்கும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டன.
* பங்களாதேஷில் பொதுத் தேர்தல் நடைபெற்றது அரச ஆதரவு ஜாதியா கட்சி பெரு வெற்றி.

### ஜூன்

* பொற் கோயிலில் கூடிய சீக்கிய தீவிரவாதிகள் ராஜீவ் காந்தியையும் இதர அமைச்சர்களையும் கொல்வதற்குத் தீர்மானம்நிறைவேற்றினர்
* முன்னாள் ஐ.நா. தலைமைச் செயலாளர் வால்ட்ஹெய்ம் ஆஸ்திரியாவின் ஜனாதிபதியாகத் தெரிவு.

### ஜூலை

* பாபுஜி ஜகஜீவன் ராம் மரணம்.
* ஜப்பான் தேர்தல்களில் ஆளும் கட்சி பெருவெற்றி. நாகஸோனி மீண்டும் பிரதமர்.
* சென்னைக்கு அருகே இந்திய கடற்படையின் விக்கிராந் விமானம் தாங்கிக் கப்பல் போர் ஒத்திகை நடவடிக்கை.
* 13ஆவது காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஸ்கொட்லாண்டில் ஆரம்பித்தது. 34 நாடுகள் பகிஷ்கரிப்பு.

### ஆகஸ்ட்

* இஸ்ரவேல்-ரஷ்யா உறவுகள் மீண்டும் உதயம்.
* இந்தியாவின் அருணாசல் பிரதேசத்தில் சீனாவின் ஹெலிக்கொப்டர் தளம் என இந்தியா குற்றச்சாட்டு.
* தமிழக மேலவை கலைப்பு சட்டமூலம்நிறைவேற்றம்.
* ராஜீவ் காந்தி செக்கோஸ்லாவியா விலிருந்து இந்தியா திரும்பிய விமானம் கோளாறு காரணமாக ரஷ்யாவில்இறக்கம். சதிமுயற்சி என சந்தேகம்.
* காமரூனில் எரிமலைவிஷவாயு கசிந்து 1800 பேர் பலி.

### செப்டம்பர்

* அணிசேரா நாடுகளின் எட்டாவது உச்சி மாநாடு ஸிம்பாப்வேயில் ராஜிவிடமிருந்துமுகாபே தலைமைப் பொறுப்பு ஏற்றார்.
* தென் ஆபிரிக்க

### வெளிநாட்டில்

தங்கச் சுரங்கத்தில் தீ விபத்து. 240 பேர் பலி.
* அமெரிக்க பத்திரிகையாளர் டானிலோவை ரஷ்யா விடுதலை செய்தது.

### அக்டோபர்

* அமெரிக்க ஜனாதிபதி றேகனும் ரஷ்யா அதிபர் கோர்பச்சேவும் ஐஸ்லாந்தில் சந்திப்பு.
* எலிஸபேத் மகாராணி சீன விஜயம்.
* பங்களாதேஷ் ஜனாதிபதியாக மீண்டும் ஏர்ஷாட் தெரிவு.
* இஸ்ரவேல் பிரதமராக இற்சா ஷாமிர் பதவி ஏற்பு.


### நவம்பர்

* பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலாவை மதம் விலக்க தீவிரவாதிகள் முடிவு.
* ஈரானிய விமானம் விழுந்து நொருங்கியதில் 30 ராணுவ வீரர் பலியானார்கள்.
* பிலிப்பீன்ஸ் அரசும் கம்யூனிஸ் கிளர்ச்சிவாதிகலும் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவு
* வடகொரிய ஜனாதிபதி கம்-இல்-சுங் சுட்டுக் கொலை என தென் கொரியா அறிவித்தது. பின்னர் அச் செய்தி ஆதாரமற்றது என புலனாகியது.
* ஜப்பானில் எரிமலை வெடித்தது 11 ஆயிரம் மக்கள் இடம் பெயர்வு.
* பிலிப்பீன் பாதுகாப்பு அமைச்சர் என்ரலே பதவி நீக்கம்.
* தென் ஆசிய நாடுகளின் ஒத்துழைப்புக் குழுவின் மாநாடு(சார்க்) பெங்களூரில் நடந்தது.

### டிசம்பர்

* மஞ்சல் காமாலை நோய் 470 பேரை நைஜிரியாவில் ஒரு வாரத்தில் பலி கொண்டது
* ஈரானுக்கு ஆயுதங்களை விற்று அந்தப் பணத்தை நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கியது அமெரிக்கா.
* இந்தியாவின் அருணாசல் பிரதேசம் மாநில அந்தஸ்து பெற்றது
* உலகத் தமிழ் வங்கி ஆரம்பிப்பது பற்றி அறிவிக்கப்பட்டது.
* பாகிஸ்தானில் இனக் கலவரம் 200 பேர் பலி, 700 பேர் காயம் பல கட்டடங்கள் தீக்கிரை.
* வியட்நாமில் புதிய பிரதமர் தெரிவு.
* சாட் மீது லிபியா நச்சுவாயு நேபாம் குண்டு தாக்குதல்.

### பொய்யாமொழி



குறள்:

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

பொருள்:

யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் பற்றிக் கொண்டு விடாதவரை துன்பங்களும் விடாமல் பற்றிக் கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
* Processing Free (நெகடிவ் செய்வ இலவசம்)
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 36282

# உதயன்

31 12 1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

A/L 87
PAPER CLASSES
(SAT & SUNDAYS)
ஆரம்பம்: 03 - 01 - 1987
9.20 - 10.30 - Chemistry - Mr. Thillainathan
10.30 - 11.30 - Physics - Mr. Varnam
11.30 - 12.30 - Botany - Mr. Kugatharan
12.30 - 1.30 - Zoology - Mr. Naganathan
New Master Institute
B. M. C. LANE, JAFFNA.

பிரயாண ஒழுங்குகள்
நோர்வே ★ கனடா
ஜேர்மனி ★ லண்டன்
சிங்கப்பூர் ★ சவூதிஅரேபியா
ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் பிரயாணம் மேற்கொள்வதற்கு நாடுங்கள்.
TRI STAR TRAVELS
No 6, Model Market,
Jaffna. Telephone: 23831

## ஆரம்பத்தில் அக்கிரம ராணுவ...

(3ம் பக்கத் தொடர்ச்சி) ளிகள் தாக்குதல் ஒரு விமானம் சேதம்.

* ஈழம் தபால் தலைகள் புழக்கத்தில் விடப்பட்டன.
* யாழ் நகரில் ஷெல் தாக்குதல் ஐந்துபோராளிகள் அமைப்பும் பதில் தாக்குதல். படையினர் 2 பேர் பலி.
* யாழ் ஆஸ்பத்திரிது ஷெல் தாக்குதல்.
* பருத்தித்துறையில் தாக்குதல் நால்வர் பலி.
* ஷெல்தாக்குதலைக் கண்டித்து ஆஸ்பத்திரி டாக்டர்கள். ஊழியர்கள் ஊர்வலம்.
* திருகோணமலை பிரதான மின்கோபுரம் குண்டினால் தகர்ப்பு லக்ஸபான தொடர்பு துண்டிப்பு.
* தாவங்குடாவில் நேரடி மோதல் 2 பொலீஸார் பலி.
* படுவான் கரையில் பொம்பர்கள் குண்டு வீச்சு.
* ஆனையிறவு முகாம் மீது புலிகள் தாக்குதல் கவசவாகனம் குடைசாய்ந்தது. காவல் அரண் சேதம்.
* திருமலையில் நேரடி மோதல், 4 சிப்பாய்கள் பலி.
* மட்டக்களப்பில் படையினர் வெறியாட்டம். 15 தமிழர் பலி.
* மட்டுநகரில் கார் குண்டு 4 படையினர் பலி.
* யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் பகிஷ்கரிப்பு.

வாகனேரியில் படையினர் சுட்டு 16 பேர் படுகொலை.

* முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல் மூன்று பேர் மரணம்.
* சர்வோதய பிரமுகர் கதிரமலை சுட்டுக் கொலை.

### அக்டோபர்

* உயிலங்குளத்தில் புலிகள் கண்ணி வெடி.

லொறிக் கொள்ளை, கடத்தல்களைக் கண்டித்து யாழ் நகரில் கடை அடைப்பு

* வெலிக்கடை, பூஸா முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது

திருமலையில் இராணுவம் பலத்த தாக்குதல். எட்டுத் தமிழர் கொல்லப்பட்டனர்.

* புதிய பண நோட்டுக்களைப் புழக்கத்தில் விட புலிகள் ஏற்பாடு.
* தமிழ் ஈழ இராணுவத்தின் சுவீப் விற்பனை ஆரம்பம்.
* யாழ் நகரில் ஷெல் தாக்குதல். 3 பேர் பலி ஆஸ்பத்திரி சேதம்.
* மன்னாரில் புலிகள் — படைகள் உக்கிர மோதல். 16 சிப்பாய்கள் பலி. சடலங்கள் மீட்பு. உயிருடன் இருவர் பிடிக்கப்பட்டனர்.
* மன்னார் மாவட்ட தளபதி விக்ரர் வீர மரணம்.
* மக்கள் பார்வைக்கு சிப்பாய்களின் சடலங்கள் வைக்கப்பட்டதன் பின் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலையிடம் 9 சடலங்களும் ஒப்படைக்கப்பட்டன.
* பிரபா—கிட்டுவைக் கொலை செய்ய முயற்சி. ஒற்றர் ஒருவர் புலிகளால் கைது.
* அடம்பன் சிப்பாய்களை விடுவிக்க மக்கள் கட்சித்தலைவர் திரு. விஜேகுமாரணதுங்க யாழ் விஜயம்.
* யாழ் நகரில் ஷெல் தாக்குதல். 2 பேர் மரணம்.
* மத்திய கல்லூரி மாணவன் சூட்டுக்குப் பலி.

### நவம்பர்

* தமிழ்க் குழுக்கள் தமது யோசனைகளை எழுத்துமூலமாக எம். ஜி. ஆரிடம் சமர்ப்பித்தன:
* மூதூர் மாவட்ட விடுதலைப் புலிகளின் தளபதி கணேஷ் வீரமரணம்.
* தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன், அன்டன் பாலசிங்கம் சென்னைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மாலை விடுதலை செய்யப்பட்டனர்.
* கப்டன் கொத்தலாவலை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை.
* பெங்களூரில் ஜே. ஆர்.–ராஜீவ் சந்திப்பு.
* பெங்களூர் யோசனைகளை புலிகள் நிராகரிப்பு
* யாழ் கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல் மூன்று பேர் பலி.
* பிரபாகரன் உண்ணாவிரதத்தை கைவிட மறுப்பு. தகவல் தொடர்பு சாதனங்கள் திருப்பி ஒப்படைப்பு.

பிரபாகரன் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழீழம் எங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்.

* லண்டனில் தமிழர் வீட்டுக்கு குண்டு வீச்சு மூவர் மரணம்.
* கோட்டையில் ஷெல் தாக்குதல் 4 பேர் பலி.

### டிசம்பர்

* பௌத்த மதகுருமார் உட்பட விஜே குழுவினர் யாழ் வருகை.
* மட்டுநகரில் தமிழ்–முஸ்லிம் கலவரம். 26 பேர் மரணம்.
* கருணாநிதி உட்பட 5,000 தொண்டர்கள் தமிழ் நாட்டில் கைது.
* வண பிதா சிங்கராயர் பலாலி முகாமில் தனது தாயாரைச் சந்தித்தார்.
* ஈ. பி. ஆர். எல். எவ்–புலிகள் மோதல்
* புலிகள் வசம் ஈ. பி. ஆர். எல் எவ் முகாம்கள்,
* மக்கள் விடுதலைப் படைத் தலைவர் கபூர் மரணம்.
* யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கிக் கிளைகள் முன் மறியல் போராட்டம்.
* நத்தார் தினம் அரசு தரப்பினரும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம்.
* ஆளும் கட்சி எட்டியாந்தோட்டை எம். பி. வின்சன்ட் பெரேரா யாழ். விஜயம். புலிகளுடன் நல்லெண்ணப் பேச்சு.

## இருவர் விடுதலை

வவுனியா, டிச 31

சாஸ்திரி கூழாங்குளத்தில் கைதுசெய்யப்பட்ட இணக்கசபை உறுப்பினர்களில் இரண்டுபேர் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர். (உ-10)

## போராளி மரணம்

சென்னை, டிச 31

கடந்த 13ஆம் திகதி திருச்சிக்கு அருகே நடந்த கார்விபத்து ஒன்றில் படுகாயம் அடைந்திருந்த புளொட்போராளி சயந்தன் நேற்று உயிரிழந்தார்.

திருச்சி அரசு மருத்துவமனையில் இவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்

விபத்து நடந்த இடத்தில் ரொபர்ட் என்ற போராளி மரணமானார்.

விபத்தில் காயமடைந்த புளொட் தலைவர் உமா மகேஸ்வரன், இராவாசுதேவா சிகிச்சை பெற்று வீடு திரும்பிவிட்டனர். (உ-ஐ-எ)

## போராளிகள்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி) செல்வி புண்ணிய மூர்த்தி

இவர்கள் வைத்திருந்ததாகக் கூறப்படும் இரணேட்டுக்களைப் பொலீஸார் கைப்பற்றினர்.

இவர்கள் திருக்கோயில் பகுதியில் இருந்து வந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

புகலிடம் கொடுத்ததாகக் கூறப்படும் இரண்டு தோட்டத் தொழிலாளர்களையும் பொலீஸார் கைது செய்தனர் (உ-ஐ-எ)

## 2 அம்ச...

(1-ம் பக்கத்தொடர்ச்சி) பொலிஸ் நிலையங்களை அமைப்பது. அப்பொலீஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலீஸாரைக் கடமைக்கு அமர்த்துவது குறித்தும் பரிசிலனை செய்யப்படுகிறது.

இந்த இரண்டு அம்சங்கள் குறித்து சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னரே திரு வின்சென்ட் பெரேராவின் அடுத்த யாழ் நல்லெண்ண விஜயம் இடம் பெறும் என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ-எ-1)

## யாழ் குடாநாட்டில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி) முடிவுக்குள் செயற்பட ஆரம்பித்துவிடும்"–என புலிகள்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ செயலகமும் ஜனவரி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்.

இந்த செயலகத்தில் சகல திணைக்களங்களும் இயங்கும். இப்படித் தெரிவிக்கப்படுகிறது.

பிரயாண ஒழுங்குகள்
● குவைத்
● சவூதி
● ஓமான்
ஆகிய நாடுகளுக்கான பயண ஒழுங்குகள் துரிதகெதியில் செய்து தரப்படும்.
அத்துடன்—
உங்கள் பாஸ்போட், பொண்ட் புதுப்பித்தல் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்துதரப்படும்.
எம்மிடம் பாஸ்போட் விண்ணப்பப் பத்திரம், எல்லா நாட்டுக்கான சகலவித முத்திரைகளும் விற்பனைக்கு உண்டு.
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உளம்கனிந்த
நத்தார் புது வருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
Horizon Enterprises
யாழ். முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல. 96, 4ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

### வைத்திலிங்கம் குழந்தைவேல் K.V.

(Technical Assistant, Irrigation Dept., Pavatkulam)

திரு வைத்திலிங்கம் குழந்தைவேல் காலமானார். இவர் சங்குவேலி, காலம் சென்ற வைத்திலிங்கம் பாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், வல்வெட்டித்துறை ஸ்ரீராஜேஸ்வரியின் அன்புக் கணவரும். உதய சங்கர், தேவகி, மைதிலி ஆகியோரின் அன்புத் தந்தையும், மட்டக்களப்பு விவசாய உத்தியோகத்தர் V.பத்மநாதன் திருமதி V. மாணிக்க வாசகர். திருமதி N. முத்துக்குமாரு திருமதி M. லிங்கநாதபிள்ளை, திருமதி M. சிவபாதசுந்தரம், திருமதி M. சண்முகலிங்கம். திருமதி V சண்முகதாஸ், திருமதி S. ரகுநாதன் ஆகியோரின் சகோதரரும், வல்லிபுரம், சாமி, அரியரட்ணம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் புதன் காலை (31. 12. 86) 9மணிக்கு வல் வட்டித்துறை ஊறணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:- திருமதி. .S. குழந்தைவேல்,
வல்வெட்டித்துறை.

### கிருஷ்ணர் கணேசர்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான கிருஷ்ணர் கணேசர் (Railway Guard K. K. S) 29-12-86 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் நவாலியைச் சேர்ந்த ராஜராஜேஸ்வரியின் (சரோஜினி) அன்புக் கணவரும், உஷா, நந்திதா (France), கரிகாலன் (கிறேக்), உமா, காண்டீபன், அகிலா, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சீனிவாசகம் (Retd Jail Officer), காலஞ்சென்ற தவமணி தர்மாவரதர், மாணிக்கவாசகர் (Retd Health Inspector, Supervising Public Health Inspector, Canada), ஆனந்தக் கிருஷ்ணன், (Post Office Vavuniya) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவாலி திருமதி மகேஸ்வரி சரவணபவான், சண்முகதாசன் (சச்சி) (Accountant, Zambia) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இறுதிக் கிரியைகள் தெல்லிப்பழையில் (31-12-86) புதன்கிழமை (இன்று) காலை நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

மீண்டும் இலங்கையில்
லோர்ஸ்பேன்* 40 ஈசி
குளோர்பைரிபொஸ் 40%

விவசாயிகளின் முதல் தேர்வு
பூச்சிநாசினி
மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்,

| | |
|---|---|
| 100 மி.லி. | ரூ. 55/- |
| 200 மி.லி. | ரூ. 98/- |
| 500 மி.லி. | ரூ. 215/- |
| 1 லிட்டர் | ரூ. 420/- |

ANGLO-ASIAN AGRO CHEMICALS
அங்லோ-ஏஷியன் [illegible] லிமிட்டட்,
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.
* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 31 - 12 - 1986 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka. Under Number QJ. 60 N 86. Telephone, 24805, 22073.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org